ரயில்வே மேம்பாலத்தில் கனரக வாகனங்கள் செல்லத் தடை

திருவாரூர், அக். 9: திருவாரூர் ரயில்வே மேம்பாலத்தில் கனரக வாகனங்கள் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம் தஞ்சை தேசிய நெடுஞ்சாலையில் திருவாரூர் சந்திப்பு ரயில் நிலையம் அருகில் உள்ள மேம்பாலத்தில், கனரக வாகனங்கள் செல்ல ரயில்வே நிர்வாகம் தடை விதித்துள்ளது.

கீவளூர், அடியக்கமங்கலம் மற்றும் திருத்துறைப்பூண்டி பகுதிகளிலிருந்து கொரடாச்சேரி, குடவாசல் மார்க்கம் செல்லக்கூடிய வாகனங்கள், புலிவலம், வேலங்குடி, மன்னை சாலை வழியாக திருவாரூர் கல்லுபாலம் வந்து பின் வழக்கமான பாதையில் செல்லலாம். இதேபோல், குடவாசல், கொரடாச்சேரி பகுதிகளில் இருந்து கீவளூர், திருத்துறைப்பூண்டி பகுதிகளுக்குச் செல்லும் வாகனங்கள் மன்னை சாலை, வேலங்குடி, புலிவலம் வழியாகச் செல்லலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சாலை வசதி கோரி மறியல் போராட்டம்

நன்னிலம், அக். 9: நன்னிலம் வட்டம் மூங்கில்குடி கிராமம் மேலத் தெருவில் பல ஆண்டுகளாக 50-க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் சாலை வசதி இல்லாமல் வயல் வரப்புகளிலும், தண்ணீரிலும் இறங்கி செல்லும் நிலை உள்ளது. குறிப்பாக பள்ளி, கல்லூரி மாணவர்கள் கீழே விழுந்து பாதிக்கப்படுகின்றனர். எனவே, மூங்கில்குடி ஆற்றங்கரைத்தெரு சாலையை சீரமைக்க வேண்டும், கீழத் தெருவில் இருந்து ஆற்றங்கரைத் தெருவிற்கு இணைப்பு சாலை அமைக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இந்திய ஜனநாயக வாலிபர் சங்க மாவட்டச் செயலாளர் பாலா தலைமையில் மூங்கில்குடி கிராம மக்கள் பாடை கட்டி ஊர்வலமாக வந்து திருவாரூர் மயிலாடுதுறை சாலையில் உள்ள காக்காகோட்டூர் கடைவீதியில் சாலைமறியலில் ஈடுபட்டனர்.

இதில், மாவட்டத்தலைவர் பா .ஆனந்த், நிர்வாகிகள் சுரேந்தர், இன்குலாப், கக்கன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். தகவலறிந்து வந்த நன்னிலம் வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் காவல்துறையினர் நடத்திய பேச்சுவார்த்தையில் சுமூக நிலை ஏற்பட்டதையடுத்து சாலை மறியல் விலக்கிக்கொள்ளப்பட்டது.

பருவமழை முன்னெச்சரிக்கை ஆய்வு கூட்டம்

நீடாமங்கலம், அக். 9: மாவட்ட வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் நீடாமங்கலம் வட்டாட்சியர் அலுவலகத்தில் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை ஆய்வு கூட்டம் வட்டாட்சியர் சரவணகுமார் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில், நீடாமங்கலம் தீயணைப்பு நிலைய அலுவலர் கார்த்திகேயன் பங்கேற்று பேசியது: வடகிழக்குப் பருவமழை தொடங்க வுள்ள நிலையில், ஆற்றில் வரக்கூடிய நீர் மற்றும் மழையால் பாதிப்பு ஏற்படாமல் இருக்க தாழ்வான இடத்தில் இருப்பவர்கள், கரையோரம் வசிக்கும் மக்கள், வயதானவர்கள், குழந்தைகள், நோயுற்றவர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும். கால்நடைகள் வளர்ப்பவர்கள் கால்நடைகள் இறந்தால் உடனுக்குடன் தகவல் தெரிவிக்க வேண்டும். திருமண மண்டபம், பள்ளிகள் உள்ளிட்டவை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இருக்க வேண்டும் உள்ளிட்ட பேரிடர் கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றார்.

அக்.12-இல் மதுக்கடைகள் இயங்காது

திருவாரூர், அக். 9: முத்துப்பேட்டை வட்டம், ஜாம்பவானோடை தர்கா பெரிய கந்தூரி விழா கொடியேற்றத்தை முன்னிட்டு, அக்.12-ஆம் தேதி அப்பகுதியில் செயல்படும் மதுபானக் கடைகள் இயங்காது என மாவட்ட ஆட்சியர் வ. மோகனச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: ஜாம்பவானோடை தர்காவில் 725-ஆவது கொடி ஊர்வலம் மற்றும் கொடியேற்றவிழா வரும் திங்கள்கிழமை (அக். 12) நடைபெற உள்ளது. இதையொட்டி, சட்ட ஒழுங்கு பிரச்னை ஏற்படாமல் இருக்க, முத்துப்பேட்டை மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் செயல்படும் அரசு மதுபான சில்லறை விற்பனைக் கடைகள், வரும் திங்கள்கிழமை (அக்.12) இயங்காது.

இணையதள குற்ற விழிப்புணர்வு கருத்தரங்கம்



கருத்தரங்கில் பேசிய மாவட்ட சைபர் கிரைம் பிரிவு ஆய்வாளர் மணிமேகலை.

மன்னார்குடி, அக். 9: மன்னார்குடியில் சைபர் கிரைம் காவல் துறை, வர்த்தக சங்கம், சேவை சங்கங்கள் இணைந்து இணைய தள குற்றத்தால் பொருளாதார இழப்பை தடுப்பது குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கருத்தரங்குக்கு வர்த்தக சங்கத் தலைவர் ஆர்.வி. ஆனந்த் தலைமை வகித்தார். செயலர் கே. சரவணன், பொருளாளர் டி. ஜெயச்செல்வன் முன்னிலை வகித்தனர். மாவட்ட சைபர் கிரைம் பிரிவு ஆய்வாளர் மணிமேகலை சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று பேசியது:

தமிழகத்திலேயே அதிக எண்ணிக்கையில் சைபர் கிரைம் குற்றத்தால் பாதிக்கபடுபவர்கள் மன்னார்குடி பகுதியை சேர்ந்தவர்கள் என புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. சமூகவலை தளங்களை பயன்படுத்தும் போது மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். இந்த பகுதியில் அதிகம் பேர் பொருள் ஈட்டுவதற்காக வெளி நாடுகளுக்கு சென்று வேலை பார்த்து வருவதால் அவர்களின் வீட்டில் உள்ள பெண்களிடம் போதிய விழிப்புணர்வு இல்லாததால் கஷ்டப்பட்டு சேமித்து அனுப்பும் பணத்தை இணைய தள மோசடியால் இழந்து வருகின்றனர்.

பலபேர் வெளிநாடுகளுக்கு வேலைக்கு அனுப்பிவைப்பதாக கூறும் ஆசைவார்த்தைகளை நம்பி பணத்தையும் பொருளையும் இழந்து பாதிப்பு உள்ளாகி வருகின்றனர். முதியவர்கள், மகளிர், படித்துக்கொண்டிருக்கும் மாணவர்களை குறி வைத்து இந்த மோசடிகள் நடைபெறுகின்றன.

இதனால், பாதிக்கப்பட்டவர்கள் காலம் கடத்தாமல் உடனடியாக சைபர் கிரைம் போலீஸில் புகார் அளிக்க வேண்டும். இதற்காக கட்டணமில்லா உதவி எண் 1930 ஏற்படுத்தப்பட்டுள்ளது. நீங்கள் எந்த மொழியில் பேசுகிறீர்களோ அதே மொழியில் உங்களுக்கு பதில் அளிப்பார்கள் என்றார்.

குறுந்தகவல்,வாட்செப்,டெலகிராப் மூலம் பெறப்படும் செயலிகள் மற்றும் கோப்புகளைப் பதிவிறக்கம்செய்யக்கூடாது.பகுதிநேர வேலை, மதிப்பீடு, யூடியூப் விருப்பங்கள் உள்ளிட்ட தகவல்களை நம்பி பணம் கட்டக் கூடாது. சிம் கார்ட் காலாவதி ஆகப்போகிறது சேவையை தொடர லிங்குடன் இணையுங்கள் என்ற குறுந் தகவல் நம்பி இணையக் கூடாது உள்ளிட்ட விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டன.

மன்னார்குடி நுகர்வோர் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சங்க தலைவர் பத்மநாபன், வர்த்தக சங்க நிர்வாகி பிரபாகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

டெல்டாவை வறட்சி பாதித்த மாவட்டமாக அறிவிக்க கோரி அக். 26-ல் முற்றுகையிட முடிவு

மன்னார்குடி, அக். 9: காவிரி டெல்டாவை வறட்சி பாதித்த மாவட்டங்களாக அறிவித்து நிவாரண நடவடிக்கைகளை தொடங்க வலியுறுத்தி அக். 26-ல் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் முற்றுகையிட்டு போராட்டம் நடைபெறும் என தமிழக காவிரி விவசாயிகள் சங்கம் அறிவித்துள்ளது.

சங்கத்தின் மாநில, மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் அவசரக் கூட்டம், வெள்ளிக்கிழமை மன்னார்குடியில் நடைபெற்றது.

இதில், பங்கேற்ற சங்கத்தின் பொதுச் செயலர் பி.ஆர்.பாண்டியன் செய்தியாளர்களிடம் கூறியது:

காவிரி டெல்டாவில் எல் நினோ தாக்குதலால் வறட்சி தீவிரமடைந்துள்ளது. செப்.1 ஆம் தேதி திறக்கப்பட்ட மேட்டூர் அணை தண்ணீர் இதுவரை யிலும் பாசன பகுதிகளுக்கு சென்றடையவில்லை. ஆறுகள், குளங்கள், குட்டைகள் உள்ளிட்ட நீர்நிலைகள் வறண்டு கிடக்கின்றன.

நேரடி விதைப்பு செய்து பல இடங்களில் முளைத்த பயிர்கள் கருகத் தொடங்கியுள்ளது. பல இடங்களில் முளைப்பதற்கு தண்ணீர் இன்றி விவசாயிகள் பரிதவிக்கின்றனர்.

இந்நிலையில், தென்மேற்கு பருவமழை குறைவால் ஒட்டு மொத்தமாக காவிரி டெல்டா பாலைவனமாக மாறி உள்ளது. எனவே, தமிழக அரசு உடனடியாக காவிரி டெல்டாவை வறட்சி பாதித்த மாவட்டங்களாக அறிவித்து நிவாரண நடவடிக்கைகளை தொடங்கவேண்டும்.

விவசாயிகள் பெற்ற கூட்டுறவு கடன் முழுமையும் தள்ளுபடி செய்யவேண்டும். குறுவையை இழந்து காப்பீடு செய்த விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டை வழங்க வேண்டும். கர்நாடகாவிடம் உரிய நீரைப் பெற்று சம்பா சாகுபடியை உறுதிப்படுத்த வேண்டும்.

இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி அக். 26-ல் தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், மயிலாடுதுறை, கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் முன் மாபெரும் முற்றுகை போராட்டம் நடைபெறவுள்ளது என்றார். சங்கத்தின் மாநில துணை செயலர் வி. சுவாமிநாதன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

வெடி விற்பனை விதிமுறைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம்

நீடாமங்கலம், அக். 9: வலங்கைமான் பகுதியில் 10-க்கும் மேற்பட்ட வெடி உற்பத்தி நிலையங்கள் நிரந்தர மற்றும் தற்காலிகம் என 50-க்கும் மேற்பட்ட கடைகள் உள்ளன.

இந்நிலையில் வலங்கைமான் காவல் நிலையத்துக்குள்பட்ட வெடி தயாரிப்பு நிறுவனங்கள், வெடி விற்பனை கடை உரிமையாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் பற்றி காவல் துறையில் நடத்திய ஆலோசனைக் கூட்டம் வலங்கைமான் காவல் ஆய்வாளர் ரேகாரணி தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்றது. கூட்டத்திற்கு வலங்கைமான் வட்டாட்சியர் சிவக்குமார், வலங்கைமான் தீயணைப்புத் துறை அலுவலர் பார்த்திபன் முன்னிலை வகித்தனர். நன்னிலம் டிஎஸ்பி முத்துக்குமரன் பங்கேற்று வெடி உற்பத்தி பட்டாசுகள், பட்டாசு உற்பத்தி செய்யும் நிறுவனங்கள், பட்டாசு விற்பனை கடைகள் ஆகியவற்றிற்கான விதிமுறைகள் குறித்து பேசினார்.

கபடி வீரர்கள் வழியனுப்பு விழா



மாநில ஆடவர் இளையோர் கபடி போட்டிக்கு தேர்வு பெற்ற மாவட்ட அணி வீரர்களை வாழ்த்தும் மன்னார்குடி எம்எல்ஏ எஸ்.காமராஜ்.

மன்னார்குடி, அக். 9: தமிழ்நாடு மாநில 52-ஆவது இளையோர் ஆடவர் கபடி சாம்பியன் பட்ட போட்டிக்கு மாவட்ட வீரர்கள் தேர்வு செய்யப்பட்டு வழியனுப்பு நிகழ்ச்சி வியாழக்கிழமை நடைபெற்றது.

வேலூர் மாவட்டம் குடியாத்தத்தில் வெள்ளிக்கிழமை தொடங்கி 11-ஆம் தேதி வரை மூன்று நாள்கள் மாநில இளையோர் ஆடவர் கபடி போட்டி நடைபெறுகிறது. இதில்,திருவாரூர் மாவட்டம் சார்பில் பங்கேற்க ஆடவர் அணிக்கான வீரர்கள் தேர்வு செய்யப்பட்டு பயிற்சி முகாம் செப்.28-ஆம் தேதி முதல் அக்.8-ஆம் தேதி வரை 11 நாள்கள் வடுவூர் விளையாட்டு அகாதெமி உள் விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இதில்,மொத்தம் 20 வீரர்கள் தேர்வு செய்யப்பட்டனர். பயிற்சி முகாம் நிறைவு நாளான வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சிக்கு, மாவட்ட கபடி கழக மூத்த உறுப்பினர் எஸ்.கணேசமூர்த்தி தலைமை வகித்தார். மாவட்ட கபடி கழக துணைத் தலைவர் பொன்.கோவிந்தராஜ், இணைச் செயலர் பிரபு,துணைத்தலைவர்கோவில் வினோத் முன்னிலை வகித்தனர். மன்னார்குடி எம்எல்ஏ எஸ்.காமராஜ், சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு கபடி வீரர்களுக்கு சீருடை, காலனிகள் வழங்கி வாழ்த்தினார். ஜூனியர் கபடி அணியின் மேலாளராக ஸ்ரீ ரங்கநாதன், பயிற்றுநராக புஷ்பதுரை, கபடி அணித் தலைவராக பி.வானவன், உடற்கல்வி இயக்குநர் ராம்குமார் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

முன்னதாக, மாவட்ட கபடி கழக செயலர் ராச.ராசேந்திரன் வரவேற்றார். மாவட்ட இணைச் செயலர் எம்.சேகர் நன்றி கூறினார்.

போதையில்லா பாரதம் விழிப்புணர்வு நிகழ்ச்சி

நன்னிலம், அக். 9: நன்னிலம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் மாஷா முக்த் யுவா நிகழ்ச்சி கல்லூரி முதல்வர் த. கிருஷ்ணகுமார் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சியில், கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள் போதை பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

நன்னிலம் துணை வட்டாட்சியர் தெ. கருணாமூர்த்தி போதைப்பொருள் இல்லாத இளையோர் என்ற தலைப்பில் போதைப் பொருளின் உபயோகத்தால் ஏற்படும் தீமைகளை மாணவர்களுக்கு எடுத்து கூறி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

முதியவர் போக்சோவில் கைது

மன்னார்குடி, அக். 9: மன்னார்குடி அருகே பள்ளி மாணவியை கர்ப்பிணியாக்கிய முதியவர் போக்சோவில் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டார்.

திருவாரூர் மாவட்டம்,மன்னார்குடி அருகேதந்தையை இழந்த பிளஸ் 1 படிக்கும் 16 வயது மாணவி தாய் மற்றும் தம்பியுடன் வசித்து வருகிறார். இவரது வீட்டின் பக்கத்து வீட்டில் எம். சத்தியமூர்த்தி (61) என்பவர் வசித்து வருகிறார். 20 ஆண்டுகளுக்கு முன் மனைவி இவருடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு விலகி சென்றுவிட்டார். குழந்தைகள் இல்லை வருமானத்துக்காக ஆடுகளை வளர்த்துக்கொண்டு தனியே வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில்,மாணவி விடுமுறை நாள்களில் தனியே வீட்டில் இருக்கும்போது, அவரிடம் சத்தியமூர்த்தி நெருங்கி பழகியதன் விளைவாக மாணவி கர்ப்பிணியானார். இதையறிந்த மாணவியின் தாய், மன்னார்குடி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் அளித்த புகாரின்பேரில், ஆய்வாளர் அகிலாண்டேஸ்வரி வியாழக்கிழமை வழக்குப் பதிந்து சத்தியமூர்த்தியிடம் விசாரணை மேற்கொண்டு போக்சோ சட்டத்தில் கைது செய்து, மன்னார்குடி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி நாகை சிறையில் அடைத்தனர்.

அரசு மருத்துவர்களைக் குறைக்கும் அரசாணையை ரத்து செய்யக்கோரி அக்.12-ல் தர்னா

மன்னார்குடி, அக். 9: அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்களின் எண்ணிக்கையை குறைக்கும் அரசாணையை ரத்து செய்யக் கோரி அக். 12-ஆம் மாநிலம் முழுவதும் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் தர்னா போராட்டம் நடத்தப்படும் என தமிழ்நாடு அரசு மருத்துவர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து, அந்த சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் எஸ். சுரேஷ்குமார் வியாழக்கிழமை மன்னார்குடியில் செய்தியாளர்களிடம் பேசியது. தமிழ்நாடு அரசு வெளியிட்ட 113 அரசாணை திருத்தமானது மருத்துவர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு பதிலாக அனைத்து மருத்துவமனைகளுக்கும் மருத்துவர்களை பரவலாக்குவதாக கூறி, மருத்துவர்களை குறைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

ஒவ்வொரு மருத்துவமனைகளிலும் நிலவும் பிரச்னைகள், நோயாளிகளின் தேவைகள் குறித்து கவனத்தில் கொள்ளாமல் அரசால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. எந்த ஒரு மருத்துவமனையிலும் இருக்கின்ற மருத்துவர்களின் எண்ணிக்கையை குறைக்கக் கூடாது அதிகரிக்க வேண்டும், பொதுமருத்துவம், பொது அறுவை சிகிச்சை, மயக்க வியல், மகப்பேறு, மருத்துவர்களின் எண்ணிக்கையை குறைத்தல் கூடாது. குறிப்பாக, தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர் அரசு மருத்துவமனைகளில் கூடுதலாக பிரசவங்கள் நடப்பதற்கான வாய்ப்புள்ள இந்த சூழலில் மருத்துவர்களின் எண்ணிக்கையை குறைக்கும் இத்தகைய அரசின் நடவடிக்கை தேவையற்றது.

குறைந்த எண்ணிக்கையில் நோயாளிகள் வருகின்ற அரசு மருத்துவமனைகளை ஆரம்ப சுகாதார நிலையமாகவும்,அதிக எண்ணிக்கையில் நோயாளிகள் வருகின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களை மருத்துவமனைகளாகவும் தரம் உயர்த்த வேண்டும். அதிக எண்ணிக்கையிலான நோயாளிகள் வந்து செல்கின்ற அரசு மருத்துவமனைகளின் மருத்துவர்களை எக்காரணம் கொண்டும் குறைத்தல் கூடாது. மன்னார்குடி அரசு மருத்துவமனையில் 6 மகப்பேறு மருத்துவர்கள் உள்ள பணியிடத்தை 4 ஆக குறைப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இது போன்று பல மருத்துவமனைகளிலும் மருத்துவர்கள் எண்ணிக்கை குறைப்பு செய்யும் வகையில் அரசாணை 113 திருத்தம் செய்யப்பட்டுள்ளது. எனவே, வியாழக்கிழமை தொடங்கி 3 நாள்கள் கோரிக்கை அட்டை அணிந்து பணியாற்றி வருகிறோம்.

அக்.12-ஆம் தேதி மாநிலம் முழுவதும் உள்ள அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகள் முன் இந்த கோரிக்கையை வலியுறுத்தி தர்னா போராட்டம் நடைபெற உள்ளது. பேட்டியின்போது, மாவட்ட அரசு தலைமை மருத்துமனை நிலைய மருத்துவர் கோவிந்தராஜ் உடனிருந்தார்.

பள்ளி மாணவி தூக்கிட்டுத் தற்கொலை

மன்னார்குடி, அக். 9: மன்னார்குடி அருகே தேர்வில் மதிப்பெண் குறைந்ததை தந்தை கண்டித்ததால் பள்ளி மாணவி வீட்டில் தூக்கிட்டு வியாழக்கிழமை தற்கொலை செய்துகொண்டார்.

மேலப்பாலத்தைச் சேர்ந்த புண்ணியக்குடி புவனேந்திரன் மகள் ஸ்ரீவர்ஷிகா (16). மன்னார்குடியில் தனியார் மெட்ரிக்மேல்நிலைப்பள்ளியில்பிளஸ் 2 படித்து வந்தார். அண்மையில் நடைபெற்ற பள்ளி தேர்வில் குறைந்த மதிப்பெண் எடுத்திருந்ததுடன் தொலைக்காட்சி அதிகமாக பார்த்துக்கொண்டு இருந்துள்ளார். இந்நிலையில், வியாழக்கிழமை ஸ்ரீவர்ஷிகாவை தந்தை கண்டித்தாராம். இதில் மனமுடைந்தவர் படிக்கும் அறையில் சேலை துணியால் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். மன்னார்குடி ஊரக காவல்நிலையத்தில் அளித்த புகாரின்பேரில் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

நீடாமங்கலம் பகுதியில் ஆட்சியர் ஆய்வு

நீடாமங்கலம், அக். 9: நீடாமங்கலம் வட்டத்தில் மாவட்ட ஆட்சியர் வ. மோகனச்சந்திரன் வெள்ளிக்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

முன்னாவல்கோட்டை அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் நெல் மூட்டைகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதா நெல் இருப்பு விவரங்கள், நெல் மூட்டைகள் நகர்வு மற்றும் நெல் உலர்த்தும் பணி நடைபெற்றுவருவது குறித்து ஆட்சியர் மோகனச்சந்திரன் ஆய்வு மேற்கொண்டு விவசாயிகள் கொண்டுவரும் நெல்லினை விரைந்து கொள்முதல் செய்ய உத்தரவிட்டார்.

தொடர்ந்து முன்னாவல்கோட்டை மற்றும் ராயபுரம் அரசினர் மேல்நிலைப் பள்ளிகளில் பள்ளிகளின் அடிப்படை வசதிகள் குறித்தும், பள்ளிகளின் சமையற்கூடம் மற்றும் பள்ளிகளின் சுற்றுப்புற தூய்மை குறித்தும், மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரம் குறித்தும் ஆட்சியர் ஆய்வு மேற்கொண்டு, பள்ளிகளில் கடந்த 2 ஆண்டில் பத்தாம் வகுப்பு மற்றும் பிளஸ் 2 பொது தேர்வு தேர்ச்சி விவரம், வாராந்திர, மாதாந்திர மற்றும் காலாண்டு தேர்வு மதிப்பெண் குறித்து ஆசிரியர்களிடம் ஆலோசித்து, 100 சதவீதம் தேர்ச்சி பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், பள்ளி சுற்றுப்புறத்தில் நீர் தேங்காமல் தூய்மையாக பராமரிக்கவும் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்தினார்.

JM Financial

JM ஃபினான்சியல் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட் (JMFARC)
CIN: U67190MH2007PLC174287
Regd. Office: 7th Floor, Cnergy, Appasaheb Marathe Marg, Prabhadevi, Mumbai – 400025
Email id: queries.arc@jmfl.com | Contact No. 022-62241676 | Website: www.jmfinancialarc.com

அசையாச் சொத்துக்களின் விற்பனை அறிவிப்பு
பிற்சேர்க்கை - IV-A பினைய நலன்(அமலாக்க)2002 இன் விதிகள், விதி 9(1) [விதி 8(6) காண்க],

கடனீட்டு சொத்துக்கள் சொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002 சேர்த்து வாசிக்கவும் பினைய நலன் (அமலாக்கம்) சட்டம், 2002 இன் விதி 8 (6) மற்றும் விதி9(1) இன் கீழ் அசையாச் சொத்துகளை மின்னணு ஏலவிற்பனைமின் மூலம் விற்பனை செய்வதற்கான அறிவிப்பு

இந்த அறிவிப்பின் மூலம் கடன்தார்(கள்), அடமானதார்(கள்), இணைகடன்தார்(கள்), அடமானதார்(கள்) மற்றும் ஜாமின்தார்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பில் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை எக்யிடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் வங்கியின் (ஒதுக்கீடு செய்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் கவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் (தொடர்ச்சியாக JMFARC-விற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது) **EB Retail 2025 - Trust / EB Retail December 2025 - Trust** ("பினையக் கடன் வழங்கியவர்") இன் நம்பகத்திற்குரியவர், JM ஃபினான்சியல் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட் (JMFARC), அவர்களால், "எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "என்ன இருக்கிறதோ அதே நிலையில்" என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தார்(கள்), அடமானதார்(கள்) நிதியை விலை, டேவனித் தொகை, ஏல உயர்வு தொகை, மின்-ஏல தேதி மற்றும் நேரம் ஆகிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன

வ எண்	கடன்தார்கள் / அடமானதார்கள் / ஜாமின்தார்கள் பெயர் & முகவரி	அசையா சொத்துக்களின் விவரங்கள்	நிர்ணய விலை, டேவனித் தொகை, ஏல உயர்வுத் தொகை	கடன் / சொத்து நிறுவைத் தொகை
1.	("கடன்தாரர்") திரு கண்ணன் G, C/O திரு காந்தி ("இணை கடன்தாரர்") 2. திரு காந்தி G, C/O திரு கோவிந்தராஜ் 3. திருமதி ஷகிலா G, C/O திரு காந்தி அனைவரின் வசிப்பிடம் 3/117, கம்பர் தெரு, தெழிஞ்சூர், தொழுதாலங்குடி, தெழிஞ்சூர், நாகப்பட்டினம், தமிழ்நாடு, 609808	நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் வட்டம், தோழுதலங்குடி வருவாய் கிராமம், சர்வமன்யா தெரு-ல் பழைய சர்வே எண்.128/6, புதிய சர்வே எண்.128/25-ல் அடங்கிய 5433.8 சதுர அடி விஸ்தீரணமுள்ள நிலத்துடன் கூடிய கட்டிடம், அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி எல்லைகள், (வடக்கில்) - சரவணன்ல வீதி, (தெற்கில்) - திரு. மகாராஜன் அவர்களின் புஞ்சை நிலம், (கிழக்கில்) - திரு. செல்வராஜ அவர்களின் வீட்டு மனை, (மேற்கில்) - திருமதி. கமசலை அவர்களின் வீட்டுமனை.	ரூ.44,03,000/- ரூ.4,40,300/- ரூ.10,000/-	கடன் கணக்கு எண். SEPONTM0332583 / 700001860710 14.09.2026 அன்றுள்ளபடி வசூலிக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ.13,83,193/- மேலும் 15.09.2026 அன்று முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற.
	விற்பனை தொடர்பான விவரங்கள் மற்றும் சந்தேகங்களுக்குத் தொடர்புகொள்ள வேண்டியவர்கள்: சதீஷ் 9940286237,சந்துரு 9629121731, முருகன் G 8838375304 & பிரசாந்த் மொண்டே - 022-62241676			
2.	("கடன்தாரர்") 1. திரு குணா P, C/O திரு பன்னீர்செல்வம் ("இணை கடன்தாரர்") 2. திருமதி கிருஷ்ணகுமாரி P, C/O திரு பன்னீர்செல்வம் இருவரின் வசிப்பிடம் 18A, மோதிலால் தெரு, மன்னார்குடி, மன்னார்குடி, திருவாரூர், தமிழ்நாடு, 614001	திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், வார்டு 2, வகையாறாநத்ர கோவில பகுதி, ஜி.ஹெ. எண் 596-ல் அடங்கிய 2610 சதுர அடி நிலம் மற்றும் அதிலுள்ள கட்டிடம். அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி எல்லைகள்: (வடக்கில்) - பட்டு கோபால் சந்திரன் அவர்களின் மனை; (தெற்கில்) - திரு. மூர்த்தி அவர்களின் மனை; (கிழக்கில்) - சாலை மற்றும் ஜி.ஹெ. எண்கள் 614, 615; (மேற்கில்) - - திரு. மணிமாறன் மற்றும் திரு. தங்கராசு ஆகியோரின் மனை.	ரூ.28,37,000/- ரூ.2,83,700/- ரூ.10,000/-	கடன் கணக்கு எண். SEMNRKD0431564 / 200002064493 / 700007675430 14.09.2026 அன்றுள்ளபடி வசூலிக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ.9,21,596/- மேலும் 15.09.2026 அன்று முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற.
	விற்பனை தொடர்பான விவரங்கள் மற்றும் சந்தேகங்களுக்குத் தொடர்புகொள்ள வேண்டியவர்கள்: அழிக்குமார் 8190005434,தீபன் 9942739202, விஜய் 8667333676 & பிரசாந்த் மொண்டே - 022-62241676			
3.	("கடன்தாரர்") 1. திரு கேட்டி R, C/O திரு ராமையன் ("இணை கடன்தாரர்") 2. திருமதி ராஜகுமாரி S, C/O திரு கேட்டி இருவரின் வசிப்பிடம் எண்: 3/31, கக்கன் தெரு, 27-சேருமங்கலம், செருமங்கலம், திருவாரூர், தமிழ்நாடு, 614014	நாகப்பட்டினம் பதிவு மாவட்டம், மன்னார்குடி சார்-பதிவுமார் மாவட்டம், திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், மற்றும் சேருமங்கலம் கிராமத்தில், சர்வே எண் 208/21-ல் அடங்கிய 4306 சதுர அடி பரப்பளவு நிலத்துடன் கூடிய கட்டிடம், அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி எல்லைகள், (வடக்கில்)- திரு.கலைபரசன அவர்களின் மனை; (தெற்கில்) - திரு.வெங்கடேசன் அவர்களின் வீடு, (கிழக்கில்) - திரு.சேகர மற்றும் பிறரின் வீடுகள்;(மேற்கில்) - பஞ்சாயத்து சாலை.	ரூ.29,93,000/- ரூ.2,99,300/- ரூ.10,000/-	கடன் கணக்கு எண். SEMNRKD0375238 / 700005546240 14.09.2026 அன்றுள்ளபடி வசூலிக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ.6,38,379/- மேலும் 15.09.2026 அன்று முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற.
	விற